# ஆதி மார்க்க னீதி மொழி

**June 2026**

***இதழ் 59 – ஜூன் மாதம் 2026 வெளியீடு***

***© AMNA Trust, Chennai***



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்னளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்னல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் னோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்னாலங்னளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்னள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்னள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே! எதார்த்த நன்மன சற்சன மக்களே !

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகை 59ஆவது இதழாக மே மாதத்தின் 12 அவை மற்றும் 4 இசை வகுப்பு நிகழ்வுடன் நித்திய மெய்ம்மணமுடன் உங்கள் கைகளில் மலர்ந்துள்ளது.

தமிழ் மொழியின் சிறப்பு அம்சமாகிய பகுபதமும் பகாபதமும் நடை எனும் உஜூதின் ரகசியமாக சாலை ஆண்டவர்கள் அருளிய அத்தனை திருப்பாடல்களிலும் பொதிந்துள்ளது. சான்றாக வான வேதாந்தச் சஞ்சீவி குரு வள்ளல் கொடுத்த வாசுகியின் சஞ்சீவி என்ற பாடல் பாடும் சமயத்தில் மூச்சை உள்வாங்குவதும் வெளி விடுவதும் எந்த இடத்தில் என்ற உஜூதின் ரகசியம் அதனுள் அடங்கியுள்ளது. இப்படியான வேத வேதாந்தங்கள் யாவும் படித்தால் தான் தெரியும். சாலை ஆண்டவர்கள் அருளிய திருப்பாடல்கள் யாவற்றிலும் உள்ள ராகதாளத்தின் அமைப்பையும் அதன் சிறப்பையும் கூறுவதே நமது ஆதி மார்க்க னீதி அவையின் இசை வகுப்பின் சிறப்பாகும்.

நமது ஒவ்வொரு அவை நிகழ்விலும் தவவிரதர் மற்றும் காஷாயம் பெற்ற அங்கத்தினர் இவர்களின் முத்திப் பேருரை யாவற்றிலும் உள்ள ரத்தினச் சுருக்கம் இன்னதுதான் என மின்னணு சஞ்சிகை மூலமாக விளங்க வைக்கும் திறனின் சிறப்பு யாவும் எனது ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்களுக்கே உரியதாகும். நம் காலத்திற்குப் பின்னர் வரும் சந்ததிகட்கும் இதனைத் தேடி வரும் எதார்த்த நன்மன சற்சன மக்களுக்கும் வேண்டியே எவ்வித தொய்வும் இன்றி ஆண்டு மலராகவும், பிரதி மாதம் மின்னணு சஞ்சிகையாகவும் இடைவிடாது பிரதிபலன் கருதாது என் மக்கள் இதனை சிறப்பாக நிறைவேற்றி வருகின்றனர்.

பல மலர்களின் தேனையும், தேனீ தன் உமிழ் நீருடன் கலந்து நன்மை தரும் அழிவற்ற தேனாக மாற்றித் தருவது போல், சாலை ஆண்டவர்கள் அருளிய திருவாக்கியமும் மற்றும் நமது அவை நிகழ்வில் பல நிலைகளிலும் வெளியான தேவ ரகசியங்களும் இன்னது தான் என தெவிட்டாத தேனாக ஆக்கித் தருவதே இம் மின்னணு சஞ்சிகை.



Copyright © AMNA Trust, Chennai

அரும் பெரும் வாய்ப்பாக நம் எல்லோருக்கும் அமைந்துள்ள இதனை மக்கள் எல்லோரும் பயன் தரும் ஒன்றாக ஆக்கி மேலும் மேலும் சிறக்க எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

***இலிங்நம்: பாவங்நளைச் சங்நரிக்கும் சர்வ வல்லமையும் னிறைந்த தேவரூபம். சத்தியரூபக தீபம்.***

***பரம பத வாழ்வடையப் பரிசுத்தப் பிரயாணமாகி, கசப்பு ஜலம் வராமல் மரணிப்பதுவே ஆஸ்திகம். அந்த ஜலம் வெளியாகி அசுத்தப் பிரயாணம் அடைவது னாஸ்திகம்.***

***தெய்வம்: தையவம், கவ்விப்பிடித்துக் கொண்டிருப்பது அதன் பிடி விட்டால் னீ இல்லை.***

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2026 மே மாதம் அவை நிகழ்வுகள் – 2026 ஜூன் மாதம் வெளியீடு

## 02-05-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தன்னே ழின்னபு சின்புற மேவுற வீரபு ரப்புரமாய்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவ சகோதரர் கௌதம் :*
மனு என்பவன் தன்னை அறிந்து வாழ வேண்டும் என்றே சர்வ வேதங்களும் கூறுகின்றது. ஒரு மெய்க் குருவின் தயவால் வித்யா தத்துவமாகிய அமானிதத்தை அறிந்து வாழ்வதே மெய் வாழ்வாகும். மனித குலம் தழைத்து ஓங்க அவதாரமாக வரும் பெரியோர்களின் விருப்பத்திற்கு நம் மனமானது லயப்பட்டு நிற்கும் செயலே நின்றதொரு பிரளயம். அவர்களின் மனோ நோக்கிற்கு இணங்கி திருவடி பணிந்து வாழ்ந்தால், நின்றதொரு பிரளயத்தின் அதிசயங்களை நெடுங்காலம் இருந்து காணலாம்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் : 237** உபதேசம் வாங்கின உடனே அதையே பெரிதாக, போதுமானதாக நினைத்துக் கொண்டால் மெய்ஞ்ஞான அறிவு வளராது.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :*
மெய்யறிவின் செயலை உபதேசித்து நம் மனப்பூட்டை திறக்கும் மெய்யாளரே குருபிரான். இல்மு எனும் மெய்க்கல்வியே கோடி மனுவுக்கு ஈந்தாலும் குறையாத சிமிழியின் மையாகும். சன்னதப் பாரவான்களின் கருணையால், நம் அகத்துள் இருக்கும் அழியா வைரமணிப் பெட்டகத்தை திறந்து அளவிலாப் பொக்கிஷத்தை அள்ளலாம். காலாதீதனாக வரும் முக்காலம் உணர்ந்த மகான்களின் நாத வல்லபமே நம்மையும் காலன் அணுகா இடமாகிய அழியாப் பதியில் குடியேற்றி வைக்கிறது.

*ஜீவ சகோதரர் வடிவேலன் :*
மனுவின் தலையே மெய் பொய்யும் பிரித்துக்காட்டும் திருச்சிற்றம்பலப் பொருளின் இருப்பிடம். மூலமந்திரச் சாவி கொண்டு ஆசான் நம் அறிவுக் கண் திறந்த பிறகே, மாண்ட மனுவாக இருந்த நாம் உயிர் பெறுகிறோம். சந்திர சூரியனுக்குக் கீழ் நாம் இருக்கும் வரைதான் நவக்கிரகங்களின் ஆதிக்கம் செல்லும். ஒரு நாத ஜோதிடரின் பேரிரக்கமே கோள்களின் பிடியிலிருந்து நம்மை மீட்கிறது. அவரருளால் காலம் கடந்த எல்லையாகிய சாலை வள நாட்டில் குடியேறிக் காலனை வெற்றி கொள்ளலாம். இப்படியான தேவ ரகசியச் செயல்களை நம் தலை மீது ஏற்றி வைக்கும் மெய்க்கல்வி கலாசாலையே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.


Copyright © AMNA Trust, Chennai

## 03-05-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **புலன்வழி பற்றி யோடிப் போக்கியென் வயதை யெல்லாம் ...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவ சகோதரர் பழனிசெல்வராஜ் :*
ஓர் எதார்த்த தேவ குருவை சந்தித்த பிறகே நாம் பொய் இன்ப நுகர்ச்சியில் உழல்வதை உணர்கிறோம். ஆசான் தன் சொல்னாப் பை கொண்டு நம்மைப் பக்குவத்தில் ஆக்கி மெய் உணர்வில் ஏற்றி வைக்கிறார்கள். ஐவழி விளைவின் அப்பாலாகிய மெய்வழி எனும் மேட்டில் குடியேறி வாழ்வதே அசலான சொர்க்கபதி வாழ்வாகும். ஆசானின் வித்தில்லா வித்தாகிய நாதத்தின் மூலமே நாம் வான நாட்டிற்குரிய வித்தாக மாறுகிறோம்.

*ஜீவ சகோதரர் நாகலிங்கம் :*
ஜென்மந்தோறும் செய்த கன்மங்களால் விதி வசப்பட்டு இப்பிறவிச் சுழலில் சிக்கித் தவிக்கிறோம். பேரருளாளரின் தயவால் நம் பொல்லா விதி எழுத்தானது துடைக்கப் பெற்று மதி எழுத்து தலை மேல் பதிக்கப் பெறுகிறது. சர்வ படைப்பின் சூட்சமங்களும் பொதியப் பெற்றுள்ளதே மெய்ஞ்ஞானம். ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலமாக வாழ்வதே மனிதப் பிறவியின் பெரும் பலனாகும்.

*ஜீவ சகோதரர் அஜய் கிருஷ்ணன் :*
பிரம்ம ஸ்வரூபியான இறைவன் நால்வகை யோனி எழுவகைத் தோற்றத்துள் வைத்து ஒன்று முதல் ஆறறிவு வரை படைத்துள்ளார். ஆறறிவு பெற்ற மனுவுக்கே விசேஷமாக ஐந்தாவது யோனியாகிய ஆவிடை எனும் தேவ யோனியில் பிறக்கும் வரம் அருளப் பெற்றுள்ளது. ஐந்தொழிலுக்கு அரசராகிய குருபிரான் தயவால் தூங்காமல் தூங்கி சுகம் பெறும் பிரம்ம வித்தையை அறிந்து, ஜீவதேகத்துள் நாள்தோறும் நுழைந்து பழகுவதே சன்மார்க்கம். மறை பொருளாக நம் தேகத்துள் இருக்கும் இறைவனை மெய்யாக உணர்ந்தவர்களே பூரணத்துவம் அடைகின்றனர்.

*ஜீவ சகோதரர் சுந்தர வடிவேல் :*
ஜீவாத்மா பரமாத்மா எனும் துவைத நிலை விட்டு கடவுள் நிலை அறிந்து அம்மயமாகும் செயலையே அத்வைதம் என வேதங்கள் அருள்கின்றன. ஆசான் அருளால் ஆகாய கங்கையில் நீராடும் போது பிறவிப் பிணி தீர்கிறது.

*ஜீவ சகோதரர் மகேஷ்குமார் :*
ஆசான் சொல்லேர் உழவு கொண்டு மாயையின் பிடியில் சிக்கியுள்ள நம் மனதை உழுது சீர் செய்து அறிவாக மாற்றி மெய்ப்பலன் அளக்கிறார்கள். இம் மெய்ச் செயலை உணர்த்தவே அனைத்து மதங்களிலும் சடங்கு சம்பிரதாயம் எனும் இறை வணக்க முறைகளைப் பெரியோர்கள் எடுத்து வைத்துள்ளனர்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.


Copyright © AMNA Trust, Chennai

## 07-05-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தேவ தேவேசனே திருமெய்ஞ் ஞான...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.



**குருபிரான் அருளமுதம் :**

ஜீவனாகிய சிவலிங்கத்தைத் தன்னுள் தரிசனமாகக் கண்டவர்களே மெய் மகத்துக்கள். சதுர்யுகங்களும் கண்ட மெய்ம்மை இரகசியமானது மனிதனுள் நாம ரூபமற்ற நாத நாதாந்தமாக உள்ளது. பெரியோர் எனும் பிரம்ம பீடத்தின் அருளால் நம் பிடரிக் கண் திறக்கப் பெற்று, திருவடி தரிசனம் அருளப் பெறுகிறது. அவரவர் அகத்தில் மாமணி ஜோதியனாக மறைந்துள இறைவனை அறிவது மெய் உணர்வின் மூலமே. எழுதாத எழுத்தாகிய வேதப் பொருளை ஓதாமல் ஓதும் பிரம்ம வித்தை செயல் கொண்டு பழகி பிரம்ம லயத்துடன் இரண்டறக் கலந்து இன்புற்று வாழலாம்.

**எமன் படர் அடிபடு திருமெய்ஞ்ஞானக் கொரல் வாக்கியம் எண் : 14 (தொடர்ச்சி)**

இறைவனுக்கு செலுத்த வேண்டிய எட்டாப் பெருங்கடனாகிய வித்யா தத்துவ அமானிதக் கடனை உனக்காக ஒருவர் கட்டி முடித்து, ஏழாவது பிறப்பும் தருபவரை லேசாக நினையாதே. மனிதனுக்கெனவே தரப்பெற்ற அமானிதம் எனும் ஆறாவது அறிவின் பேருண்மையை உணர்த்துபவரே ஆசான். இறைவனிடம் ரோஸ்மீதாக்குடைய காலத்தில் பெற்று வந்ததே வித்யா தத்துவக் கடன். வந்த வேதமாக சர்வ சன்னதமுடன் யுக அவதார புருஷராக வரும் ஆசான் தயவால் ஏழாம் பிறப்புடலம் பெற்று அமானிதக் கடன் தீர்த்தால் தெய்வத் திருவடியில் சேரலாம்.

**குரு ஸ்தோத்திரம் - குருபிரான் அருளமுதம் :**

நற்றாள் எனும் திருவடியானது மனிதனின் நெஞ்சகமாகிய நடு வீட்டினுள் புதையலாக, புராதனச் சொத்தாகப் பொதிந்துள்ளது. அதுவே திவ்யத் திருவடியாக காவலான புராதனராக, துப்புரவாகத் துலக்கும் ஆசானாக நம் இருதயத்துள் இலங்கி நிற்கிறது. அனித்தியப் பொருட்களின் மீது அழுத்தமாக பற்றியுள்ள நம் ஆசையை அறவே அழித்து, நித்தியப் பொருளின் மீது ஆவல் ஓங்கும் படி செய்து வைப்பவரே வரோதயர். வேடிக்கை வினோதமெனும் மாயக் கூத்தில் சிக்கி காயப்பட்டுக் கொண்டிருந்த நம் அகத்தில், தூய ஞானச் சுடர் விளக்கேற்றி அறிவின் வெளிச்சத்தில் நம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கும் வாலகுரு வள்ளலின் திருப்பாதம் பணிவோம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 09-05-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **என்ன காலமிறைவன் திருவருள்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
ஈசனின் சக்தியும் மனித தேகமும் சேர்ந்து புண்ணிய உருவாக வருபவரே குருபிரான். ஆமனு எனும் அடி, முடி, னடுவின் ரகசியத்தை அறிந்தவரே மனு ஈசன். எதார்த்த உள்ளம் கொண்ட மக்கள் அனைவரையும் நீதி வழியில் நடத்தி நித்தியர் ஆக்குவதே ஆதி மார்க்க னீதி அவையின் அடி நாதமாகும்.

*ஜீவ சகோதரர் கௌதம் :* தேவன் ஆவதற்குரிய வித்து னரன். பொய் மெய்யும் பிரித்துக் காட்டும் வேதமாகிய ஆசானின் அருளால் நீதி எனும் பொருளை அறியும் போதே மனு எனும் பதத்திற்கு உரியவர் ஆகிறோம். குரு பெருமான் அருளால் நெற்றிக்கண் திறக்கப் பெற்றவர்க்கே சர்வ படைப்புகளின் சூட்சுமமும் புரியும். தன் எனும் ஜீவ குகைக்குள் அவரவரின் நாமத்திற்குரிய பொருளான இறை சொரூபத்தை தெரிசிக்க அருள் புரிபவரே தவ சிரேஷ்டர். அவர்களின் ஓசை கொண்ட திரு நடனமே நம் உயிர் தித்திக்கச் செய்யும் அமுதமாகும்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் வாக்கியம் எண் : 238** எமனுடைய வல்லபத்தை முறியடிக்க ஒரு துணையை இப்பவே தேடாவிடில், அவனிடம் சிக்கி அடிபட்டு மிதியுண்டு நரக தேகம் எடுக்க வேண்டியது தான். பிறவிப் பிணியிலிருந்து விடுதலை பெறுவதே மனித வாழ்வின் உயர்ந்த நோக்கமாகும். குரு அருளும் பிரம்ம வித்தை மூலம் ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலமாகுவதே சன்மார்க்கச் செயலாகும். நம் எண்ணம், சொல், செயலின் மூலமே சொர்க்கமும் நரகமும் நிச்சயிக்கப் பெறுகிறது. பெரியோரின் திருப்பாதத்தில் சரண் புகுந்தோரே அறியாமை நீங்கி பஞ்சாட்சரத்தின் உண்மைப் பொருளை உணர்வர். அவர்களே நவக்கிரகங்களின் அதிகாரம் கடந்து காலமற்ற இடத்தில் குடியேறி காலன் என்ற பயமின்றி வாழ்வர்.

*ஜீவ சகோதரர் கோபிநாத்:* ஒருவரின் அடையாளமான வாய்மையைக் கைபேசி மூலமாகத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஏமாற்றும் மோசடிக் கும்பலால், ஆசை, அவசரம், பய உணர்வுகள் கொண்ட பல மனிதர்கள் ஏமாற்றப்படுகின்றனர். எனவே கைபேசியில் வரும் தகவல்களைத் தெளிவாக ஆய்ந்து செயல்படுவது மிகவும் அவசியமாகும். புற உலகில் நாம் செலுத்தும் விழிப்புணர்வை குருவின் அருளால் அகத்தில் திருப்பி மெய் உணர்வாக மாற்றி வாழ்ந்தால் கைபேசியால் வரும் தீங்கிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம் - யாக்கோபு : அதிகாரம் 3 (திருவசனம் : 6 முதல் 11 வரை)** மனிதனைப் பிரகாசிக்கச் செய்யும் மெய்யான ஜீவ ஒளியான கோடி சூர்யப் பிரகாச இறை சக்தியை, அறிவு பூரிக்க உணரச் செய்து மெய் அனுபவமாக்கி வைப்பவரே ஆசான். ஆதியின் நாவிலிருந்து பிறக்கும் நாதம் நம் நினைவில் ஊன்றப் பெற்று பரம ஞானத்தை மலரச் செய்கிறது. ஆதியில் தேவனிடத்தில் வித்தில்லா வித்தாக இருந்த அருளமுத வார்த்தையே நம்மை தேவனாக மாற்றி முத்தி எனும் விடுதலை அளிக்கிறது.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 10-05-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **உய்ய வேயெனக் கும்முல குய்யவே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

மனம் தெளிந்து தானும் இறை நிலையை அடைந்து, பிறரையும் அதே நிலையை அடைய வழி காட்டுவதே அறிவின் செயல். குருவின் இரக்கத்தால் தான் பெற்று வந்த ஆறாம் அறிவை அறிவதே மனிதனின் தலையாய கடமையாகும்.

*ஜீவ சகோதரி மணிமொழி:*

சைவமும் அசைவமும் ஆன்மீக நிலையைக் குறிப்பதேயாகும். அசைந்து கொண்டே இருக்கும் மனதை அசையா நிலையில் பழக்கும் செயலே யோகம். அழி உடல் மீதுள்ள பற்றை விடுத்து, உயிரின் மீது பற்று உண்டாக்குவது குருவின் உபதேசம். தன் ஜீவன் நஷ்டம் அடையாமல் காக்கும் ஜீவகாருண்யத்தை அறிந்து வாழ்வதே மெய்ஞ்ஞானம்.

*ஜீவ சகோதரர் யுவராஜ் :*

**நாம் ஏன் பிறந்தோம்? நம் கதி முடிவில் என்னவாகும், என்று ஆய்ந்து தேடுகின்ற தேட்டமுடையவனே மனு** எனும் தெய்வத் திருவாக்கின் படி, குரு அருளால் ஆறறிவு பெற்று மனிதனாகப் பிறந்த நாம், தன்னையறிதல் எனும் பிறப்பின் கடமையை நிறைவேற்ற வேண்டும். ஆசான் வாய்மைக்குள் ஆகி, திட கவனம், வைராக்கியத்துடன் மெய்ச் செயல் பழகி வருவதன் மூலம் ஞான மார்க்கத்தில் நிலைத்து நின்று பிறவாமை எனும் பெரும்பேறு பெறலாம்.

*ஜீவ சகோதரர் சசிகுமார் (மிட்டப்பள்ளி) :*

உருவம் பல கோடி ஆயினும் உயிர்ப் பொருள் ஒன்றே. மண்ணால் உருவாகும் பல பொருட்களுக்கும் அடிப்படை ஆதாரப் பொருள் ஒன்றே. இத்தத்துவ நிலையை ஒத்தே மனிதனும் படைக்கப் பெற்றுள்ளான். நான் எனும் அகந்தையால் நிலையற்ற வாழ்வைப் பெரிதென எண்ணி வாழாமல், குருபிரான் வாக்கிற்கு இணங்கி பிரம்ம வித்தை பழகித் தேர்வதன் மூலம் நான் எனும் அகந்தை அற்று நிலையான நித்திய வாழ்வு வாழலாம்.

*ஜீவ சகோதரி கவிதா வெங்கட் :*

வினைத் தொடரால் மானிடச் சட்டை தாங்கி வந்து பிறவித் துன்பத்தில் தவிக்கும் நம்மை விடுவிப்பவரே விக்ன விநாயகராம் குருபிரான். பல கோடி எண்ணமாய் விரிந்துள்ள மனதை ஓர் முகமாக்கி நிற்பதே தவம். உடம்பினுள் உறையும் உத்தமனான இறைவனை அறிதலே மனிதப் பிறவியின் மெய்ப் பயனாகும். ஒழுக்க நெறியுடன் ஞானப் பாதையில் பயணித்தால், வினை நீங்கிப் பிறவாமை பெறலாம்.

*ஜீவ சகோதரர் பாலா (காஞ்சிபுரம்) :*

மனதை அறிவாக மாற்றும் செயலே பிரம்ம வித்தை. புற நோக்காக ஓடும் மனதை அக நோக்காக மாற்றி வைப்பவரே பரமகுரு. அவர்களின் அன்பும் கருணையும் நம் மீது பாய்வதன் பலனாக நம் தாயாதிச் சொத்து கை வரவாக்கப் பெறும். குருவின் அருளால் மூச்சு லயமாகிய மனோலயத்தை முச்சந்தியில் சந்தித்து உறைவதே பரமானந்த வாழ்வாகும்.

*ஜீவ சகோதரர் பார்த்திபன்:*

மனிதன் இறைநிலையோடு இணையும் புனித இடமே ஆலயம். கிறிஸ்தவர்களுக்கு தேவாலயம், முஸ்லிம்களுக்கு மசூதி, இந்துக்களுக்கு கோயில் என கட்டிடங்கள் பலவாக இருந்தாலும் “இறைவன் ஒருவன்” என்பதை உணர்த்தும் நோக்கம் ஒன்றே. இறை வடிவ சிலா



Copyright © AMNA Trust, Chennai 

ரூபங்களும், கருவறை, கொடிக்கம்பம், பலிபீடம், போன்ற யாவும் ஆன்மிகப் பயணத்தின் அடையாளங்களாகும். மனிதனின் ஊனுடம்புக்குள் பொதிந்திருக்கும் மெய் ஆலயத்துள் நுழைந்து பேரின்பம் அனுபவிக்கவே பெரியோர்கள் அரும்பாடுபட்டு பிரம்மாண்ட ஆலயங்களை ஸ்தாபித்துள்ளனர்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 14-05-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி **குன்றாத பேரருளின் மணியே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது .

**குருபிரான் அருளமுதம் :**
உடல் எனும் கூட்டுக்குள் சிறைப்பட்டுள்ள நம்மை, நாத வல்லபத்தால் மீட்டு திருவடிப்பேறு அருளும் மெய்ச்செயலே பெரியோர்களின் கைம்முதலாகும். சார்ந்ததின் வண்ணமாக மாறும் மனதின் வினையே பல பிறப்புகளுக்கும் காரணமாக அமைகிறது. நம் குணங்களால் அமைவதே ஒன்று முதல் ஐயறிவு வகையாகவும், கல், பேய், கணங்கள், அசுரர், முனிவர், தேவர் என்ற படி நிலைகளின் வாழ்வாகவும் உள்ளது. வேதங்கள் யாவும் கூறும் சமாதானம், சமத்துவம், சமரசத்தின் உண்மைப் பொருளை பாத ரகசியம் அறிந்த மக்களே உணர்வர். ஆசான் துணையுடன் நம் உள்ளத்துள் உறைந்துள்ள இருதயக் கமல வாசனைத் தரிசிக்கும் போதே எட்டாத மேனிலையாம் ஏல மலையிலேறிப் பேரின்பம் பெறலாம்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் எண் : 15**
எமன் தன் முழு வல்லபத்தோடு கூத்தாட நிற்கின்ற அந்தப் பிரளய நேரத்தில் சர்வத்தையும் சங்காரம் செய்கின்ற அந்த எமன் பதி எல்லையில் தெய்வ ஒட்டுதலில் நம் எண்ணம் நிற்காவிட்டால் பிறவிச் சுழலில் மாட்டுவது நிச்சயம்.

**குரு ஸ்தோத்திரம் - குருபிரான் அருளமுதம் :**
குருபாதமே மெய்ஞ்ஞானப் பாதையில் நிழல் போல் பிரியாது காவலாக இருந்து நம்மைக் காக்கிறது. நம் சிரசில் வேகாச் சீர்பாதமாக நின்றிலங்கும் ஜீவனை அறிந்தவர்க்கே வேதம் தேங்கரும்பாகத் தித்திக்கும். **கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்** என்கிறது சத்திய வேதம். இதன் அகமிய ரகசியத்தை, குருபிரானின் தேனமுதாகிய உயிர்க்களிப்பு வாய்மையால் உளம் குளிரும் தருணமே நம்மால் உணர முடியும். கீழ் நோக்கிப் பாயும் ஜல அம்சமான நம் மனம் ஆசான் அருளும் நாத மருந்தின் உந்து சக்தியால் மேல் னோக்காகப் பாய்வதே பிரம்மவித்தைச் செயலாகும். குருவின் அருளால் அஷ்டாங்க யோகம் பழகி வர ஆவியான அரும்பளிங்கு ஈசனுடன் இரண்டறக் கலந்து இன்புறலாம். நீதி வடிவாக வரும் குருவின் தயவால் மனம் அலைவற்று லயமாகும் செயலே னின்றதொரு பிரளயமாகும். சாலை ஆண்டவர்கள் தான் பெற்ற பேரின்ப னிலைகளைத் தன் மக்களும் அடையவே திருப்பாற்கடலைக் குறுகக் காய்ச்சி வடித்தெளித்திட்ட வேதாந்தமாக அருளியுள்ளார்கள். சிந்தையற்ற தனித் தலைமைப் பதியில் நம்மைக் குடியேற்றி குன்றாத பெருவாழ்வு அளிக்கும் அருந்தலமே ஆதி மார்க்க னீதி அவையாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது .



Copyright © AMNA Trust, Chennai 

## 17-05-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **வாக்குடைய மலங்நடத்தி வயங்ஙா னின்று...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம் :**
மனிதனுக்கென்றே பஞ்ச பூதங்களின் துணையோடு இப் பிரஞ்சமானது இறைவனால் படைக்கப் பெற்றுள்ளது. பரிபூரணமாய் எங்கும் நிறைந்துள்ள இறை பொருளை மக்கள் உணர்ந்து உய்வடைவதற்கே பாரவான்களால் வேத வேதாந்தங்களும் இப்பூமண்டலத்திற்கு இறக்கி அருளப் பெற்றுள்ளது. எழுதாத எழுத்தாக, பிள்ளையார் சுழியாக நின்று விளங்கும் நற்றாளைத் தொழுவதே கல்வி கற்றதன் பயனாகும். குருபிரான் ஓர் மொழி கீதை கொண்டு பிரம்ம வித்தைச் செயலை நம் தலையில் பதித்துப் பழக வைத்துப் பிறவாமை அருள்கிறார்கள். மாறாதிருக்க வந்த மறையோன் சொரூபத்தை அறிவதற்கே நம்மிடம் ஆறாவது அறிவு தரப்பெற்றுள்ளது. ஐம்புல நுகர்வுக்கும் காரணமான னித்தியப் பொருளை அறிவதே தன்னையறிதல். மனுவின் தலையில் அறிவு மாணிக்கம் பதிக்கப் பெற்றுள்ளதை குருபிரான் நாதத்தின் மூலமே அறிய முடியும். அறியாமையை விலக்கி அறிவுத் தெளிவு உண்டாகச் செய்து பிறவாமை அளிக்கும் தெய்வீக எல்லையே ஆதி மார்க்க னீதி அவை. பரிசுத்த ஆவியின் வழிநடத்தலுடன் இம் மாபெரும் அவையானது சீரோடும் சிறப்போடும் நித்தம் நடைபெற்று வருகிறது.

*ஜீவ சகோதரி விஜயசித்ரா :*
அறியாமை இன்னதென அறியும் போதே அறிவுத் துலக்கம் உண்டாகிறது. பஞ்ஞு பூத கணத் தலையரசாக, தொந்திக் கணபதியாக மனிதனின் கடத்துள் நின்றிலங்கும் ஆன்மப் பொருளை அறிவிப்பதே ஆறாவது அறிவாகும். **தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது** என்ற பழமொழிக்கு ஏற்ப, அறிவு அறியாமை கடந்த அழியாப் பொருளை, குருபிரான் பேரிரக்கம் கொண்டு நம்மிடம் சுட்டிக் காட்டும் போதே பேரறிவின் பெரும் பலனைப் பெற முடியும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 21-05-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. முத்துலட்சுமி

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **தேவத் திருமலி...** என்னும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
அருட்பழம் அருளும் ஆசானே ஞானப்பழம். அறிவு வடிவாக நம்மிடம் இருக்கும் ஆசானுடன் அகலாதிருக்கும் செயலே சாயுச்ய நிலை. ஆசான் அருளால் காணப் பெறுவதே அறிவின் வடிவு. ஐவழி விளைவுக்கு அப்பால் உள்ள இறைவனை அறிய வைக்கும் செயல் உள்ளதே பகாபதம் அற்ற தமிழ். அடி முடி நடு அண்ட பிண்டமாக இருக்கும் ஆதி என்னும் ஜீவனை அறிய வைக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை. எவ்வழி நல்வழி அவ்வழி எனக்கருள் என வள்ளல் பிரான் வேண்டியது அவ்வழி எனும் ஓரறிவான தெய்வ நிலையாகும்.

18 நிலைகளாக பகவான் அருளிய பகவத் கீதையின் அத்தனை செயல்களும் அவரவரிடம் இருக்கும் அகமியச் செயலாகும். ஆசானிடம் முப்பொருள் தத்தம் செய்தே இறைவனை அறிய முடியும். ஆசான் அருளால் அவரவரின் சொந்த தேகத்தில் குடியேறி வலம்



Copyright © AMNA Trust, Chennai 

வரும் செயலே அகில வலம் வருவதாகும். அறியாமையுடன் போர் புரிந்து வென்று அறிவு எனும் அரியணையில் ஏறி அமர்வதே ஆன்றோரின் செயலாகும்.

*ஜீவ சகோதரர் வடிவேலன் :* ஆதியின் சரித்திரமே சாலை ஆண்டவர்கள் அருளிய ஆதி மான்மியம். பரிசுத்த ஆவி எனும் விஸ்வநாதத்தால் வெளியாக்கப் பெறும் அகமிய உலக அனுபவங்களை ஆவிடை என்னும் தேவயோனியில் பிறந்தவர்களே அறிவர். தோற்றத்தில் இல்லாத சமத்துவம் ஐம்புல நுகர்வில் தான் உள்ளது.

ஆதியின் மார்க்கமாகிய வழியை நீதி கொண்டு அறிய வைக்கும்செயல் உள்ள இடமே ஆதி மார்க்க நீதி அவை. ஆசான் அருளால் அகக்கண் திறக்கப் பெற்றவர்களே அகரத்தை அறிந்து ஆசானின் சொல்லக விளக்காகிய ஜோதியின் மூலம் இருதயத்தில் இருக்கும் இறைவனைக் காண்பர். ஐம்புலனை ஐம்பொறியாக மாற்றுவதே அறிவின் செயல். விஷாதம் எனும் குழப்பம் வந்த பின் அர்ஜுனன் அறிவுத் தெளிவு பெறுவது போல் குழப்பம் நீங்கி மனத் தெளிவு பெற்றவர்களே மெய் எனும் பொறுப்பு இன்னதென அறிவர்.

**திரு மெஞ்ஞானக் கொரல் வாக்கியம் 15 தொடர்ச்சி :** ஏழு பிறப்பு என்பது ஒவ்வொரு பருவத்திலும் முன் இருந்த அனித்திய கருவிக் குலங்கள் மாறி னித்தியக் கருவிக் குலங்களாகி அதற்கு ஏற்ப எண்ணம் சொல் செயல் மாறுவதாகும். இப்படியான பிரம்மாண்ட செயலே மறுபிறப்பு.

*ஜீவ சகோதரர் குமார் :* அழிவில் இருந்து அறியாமைக்கு மாறும் செயலே மனம் அறிவாக மாறும் ஏழாம் பிறப்பாகும். அமானிதம் என்ற கடன் பெற்று வந்த மனுவுக்கே இறைவனை அறிய வேண்டிய கட்டாயக் கடமை உள்ளது. வித்தில்லா வித்தாகிய பெரியோரின் வாய்மையே பிறந்தது இனி இறவாத பேசும் பஞ்சாட்சரம். யுகாந்த நாட்டுச் செல்வமாகிய அதனை அறிய நீடாழி உலகில் விதிக்கப் பெற்ற மக்களே அறிவர். குருகுல வாசமாக இருந்து பழகி வரும் மக்களே காலம் எனும் காலனைக் கடக்கும் மெய்ப் பொருள் அறிந்து மெய்ப் பயன் பெறுவர். மாயா சரீரமாகிய தூலம் தாங்கி வரும் பெரியோரே நம்மை ஜீவ ஏற்றத்தில் ஆக்க வல்ல ஜீவ பண்டிதர்.

*ஜீவ சகோதரர் சங்கர் :* புராதனமாகிய இறைவனின் சாயலே அருட்பழம். ஆறு பிறப்பு கடந்து ஆசான் அருளால் பிறக்கும் ஏழாம் பிறப்பே தெரிவை. இறைவனுக்கு நிகரான வல்லமையுடன் அரூபத்தில் நம்மை ஆள்கின்ற மனதை அறிவாக மாற்றும் செயலே பிரம்மவித்தை. ஆசான் நம்மிடம் விதைக்கும் வித்தில்லா வித்து விருட்சமாகும் வரை அதனைக் காத்து நமது மெய் உணர்வு உகார ரகிதமாக மாறிட கவனமும் திட சித்தமும் வேண்டும். நமது விதி எழுத்தை மதியாக மாற்றும் பதி ஒருவர் மூலமே மீண்டும் கருவறையில் சென்று அடையாமல் காக்கப் பெறுவோம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 23-05-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி, **நிறைந்த பரிபூரணமாய் நிர்க்குணமாய்...** எனும் சிவானந்த போதம் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவ சகோதரர் கௌதம் :* பஞ்ஞாட்சர மேனியராம் குருபிரானின் வாக்கே சொல்லக விளக்காக நம் செவிகளில் நுழைந்து சிவன் எனும் வாடாத தீபத்தை ஒளிரச் செய்கிறது. குருவே தன் நாத வல்லபத்தால் மெய் வணக்கம் பழகச் செய்து முக்குணத்தில் உழலும் நம்மை நிர்க்குணமாக மாற்றுகிறார். வெட்ட வெளிக்குள் சுழித்தாடி நிற்கும் மனக் கண்ணாடியே வெளிச்சப் பொருளாகி நம்மை வழி நடத்துகிறது. வேதத் தாயாக வந்து அறிவுப் பிறப்பில் நம்மைப்



Copyright © AMNA Trust, Chennai 

பெற்றெடுத்த புண்ணியத்தின் உருவே ஆசான். அவரின் திருவடி நிழலே நாம் பரமபதம் அடைவதற்கான வழியாகும்.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர் திருவாக்கியம் எண்: 238 ( தொடர்ச்சி)** நாம் எங்கு இருக்கிறோம்? எமன் கையில் சிக்கி இருக்கிறோமா அல்லது அதை விட்டு விலகி தேவன் கையில் சிக்கி இருக்கிறோமா என நீங்கள் ஒவ்வொருவரும் சதா எண்ணிய வண்ணம் இருக்க வேண்டும்.

*ஜீவ சகோதரர் கௌதம் :* வேங்கையான எமனின் கோரப் பிடியில் கட்டுண்டு அதோ கதியாக வீணாகிக் கொண்டிருக்கும் நம் வயது வாழ்நாளை மீட்டு, சிவகதியாக மாற்ற அவதாரம் தாங்கி வருவோரே தீர்க்கதரிசிகள். காற்றைப் பிடிக்கும் கணக்கின் மூலம் வினையறுக்கும் வித்தையை அருளி ஏறா நிலமிசையில் நம்மை ஏற்றி வைப்பரே ஏல வல்லவர்.

ஜீவ சகோதரர் விஜயகுமார் : **பரிசுத்த வேதாகமம்: யாகோபு : அதிகாரம் 3 : 13 - 18**

**அரிது அரிது மானிடர் ஆதல் அரிது** எனும் ஔவைப் பிராட்டி அருளிய படி, நரன் எனும் தேகத்தில் மாண்டு கிடந்த நம்மை எழுப்பி மறு பிறப்பளித்து, நீதியெனும் பொருளான மனுக்குலமாகப் படைத்தவரே நித்தியர். சமாதானம், சமத்துவம், சமரசம் எனும் உயிர் ஒட்டிய இரகசியத்தை உணர்வதன் மூலமே நாம் ஞானத் தெளிவு பெற முடியும். ஆசானின் பேரன்பு நம் மீது சாயும் தருணமே அறிவின் ஒளி பணர் வீசி மனம் செம்மையாகி புண்ணிய வழிக்குத் திரும்பும். "மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபமாய் இருக்கிறது" எனும் சத்தியத் திரு வசனமானது நிஜமாகும் நித்திய எல்லையே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 24-05-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்களின் திருவடி பணிந்து, அருட்பிரகாச வள்ளலார் அருளிய **அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே...** எனும் திருப்பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம் :**

ஆசான் நம் மீது வைக்கும் அன்பே நம்மை சிவமாக்கி முக்தி எனும் விடுதலை தரும். அவர்களின் நாத தொனியே சங்கோசையாக நம் செவிகளில் நுழைந்து தேரைந்து மந்திரம் அறிந்த தேவர்களாக மாற்றுகிறது. சாகாத்தலை வேகாக்கால், போகாப்புனல் எனும் சன்மார்க்க மரபை செயலாக்கி வைக்கும் திருஸ்தலமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவ சகோதரர் ஏகாம்பரம் :* ஐயறிவு ஜீவ பேதங்களுக்கு நன்மை செய்வதே காருண்யம் என்ற அறியாமை, குருவின் அருளால் அகன்று நமது ஜீவனுக்காகச் செய்யும் அறச் செயலே அசலான ஜீவகாருண்யமாகும். வேதங்கள் அருளும் பரிபாஷை சொற்களின் உண்மைப் பொருளை மெய் அனுபவத்தின் மூலமே உணர முடியும்.

*ஜீவசகோதரி வளர்மதி :* உலகக் கல்வி கொண்டு பெற முடியாத மெய்ஞ்ஞானத்தை குருவின் தயவால் சாகாக் கல்வி பயின்றே பெற முடியும். ஆசான் அருளிய யோக நிலையில் நித்தம் பழகி, மனத் தெளிவுடனும் கவனமுடனும் இக பர வாழ்வில் தெளிவாக வாழலாம். குருவின் அருளால் வாழும் காலத்தில் மரணமிலாப் பெருவாழ்வு பெற்று சிரஞ்ஜீவியாக வாழ வந்தவனே மனு.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவ சகோதரர் கோபாலகிருஷ்ணன் :* ஆசானின் அன்பால் எதார்த்த உள்ளத்துடன் கழுத்திற்கு மேல் உள்ளதே ஞானம் என அறிவதே அறிவு. அழியாத மா அம்சமுடன் அகமியத்தில் பிரகாசப் பொருளாக விளங்குவதே இருதயம். ஆசான் அருளால் மும்மலம் கருகிய பின்பே முச்சுடர் தோன்றி இறை தரிசனம் கிட்டும்.

*ஜீவ சகோதரர் கணேஷ் கிருஷ்ணன் :* வசிஷ்ட மாமுனிவர் ராமபிரானுக்கு அருளிய உபதேச மொழிகளே யோக வாசிஷ்டம். யுகங்கள் நான்கும் கை கொண்ட கோடூழியரே சாலை ஆண்டவர்கள். அவர்களின் கயிலாய பரம்பரையில் வந்த பாரவான்களின் அருளால் நாம் பெறுவதே பிறவாமை. கலியுகத்தில் இருந்து நம்மை மீட்டு கிரேதா யுகத்தில் குடியேறி வாழ்வதற்கான வழிகாட்டும் வள்ளலே குருபிரான்.

*ஜீவ சகோதரர் அருண் :* குருவின் அருள் பெற்றவர்க்கே சத்திய வசனம் கூறும் *ஒருவரின் பாதங்களை ஒருவர் கழுவ வேண்டும்* என்பதின் மெய்ப் பொருள், அழியா உடலைத் தாங்கும் திருவடியே பாதம் என அறிந்தவர்க்கே புரியும். தூங்காமல் தூங்கும் மெய்ச்செயல் பழகிய மக்களே உயிரொட்டிய காலச் சக்கரத்தின் ரகசியம் அறிவர். சுவாமி சிவானந்த பரமஹம்சர் அருளிய படி, பிரம்மாவிற்கு சரஸ்பதியே, தாய், மகள், மனைவி, சகோதரி, எனும் தத்துவ நிலை, குருவின் தயவால் அகமியத்தில் அறிகின்ற சிவானுபவமாக உள்ளது.

*ஜீவ சகோதரர் கோபிநாத் :* மெய்ஞ்ஞானச் செம்மலாகிய நம் குரு நாதரின் அரும் பெரும் செயலால் வாலைத் தாய் சன்னதியுடன் திண்டிவனம் அருகில் அமைந்துள்ளதே சரவண நந்தவன வளாகம். அங்கு நிர்மாணம் செய்யப் பெற்றுள்ள ஆதி மார்க்க னீதி அவையின் பரிசுத்த மெய் ஆலயம் இன்று மக்களின் பிறவிப் பிணி தீர்க்கும் பூலோக வைகுண்டமாகத் திகழ்கிறது.

## 30-05-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **மானிலத்தில் அம்பலவர் மாணிக்க வாசகர்க்கு...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
தவ சிரேஷ்டர் அருளும் தூங்காமல் தூங்கி சுகம் பெறும் பிரம்ம வித்தையை நித்தம் நாம் பழகி வருவதன் மூலமே மும்மூலத்தை வெல்ல முடியும். **மும்மூலம் வென்றதாலே முருகன் என்று எந்தனக்கு பேருமாச்சு** என முருகப் பெருமான் அருளிய மெய்ச் செயலை உலகம் அறிவதற்கே, வைகாசி விசாகத் திருநாளில் ஆலயங்களில் முருகப் பெருமானுக்கு திருமஞ்சன சேவை நடைபெறுகிறது. எதார்த்த உள்ளம் கொண்ட மக்களுக்கு அழிவிலா நித்திய பூரண மேம்பாடுகள் அனைத்தும் அருளப் பெறும் இடமே ஆதி மார்க்க னீதி அவையாகும்.

*ஜீவ சகோதரர் வடிவேலன் :*
அம்பலவாணராக வரும் குருவே, தம் பாதம் என்னும் வாசக் கமலத்தை நம் தலை மீது பதிப்பித்து அறிவுச் சுடரைப் பிரகாசிக்கச் செய்கிறார்கள். நீல மலையில் நிஜ தேவத் தெய்வமாக வீற்றிருக்கும் திருச்சிற்றம்பலப் பொருளை சேல் விழி எனும் மூன்றாவது கண் கொண்டு தரிசிக்கும் செயலே விஸ்வரூபம். பாதிமதி எனும் மூன்றாம் பிறையை தலையில் சூடி வருபவரே முதல் ஞான மூர்த்தி. அவர்களின் திருப்பாத்தை எக்கணமும் மறவாமல் கருத்துணர்ந்து சேவிப்பவரே சாகா வரம் பெற்று சாயுச்சிய பதவி அடைவர்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண்: 238 (தொடர்ச்சி)** உபதேசம் வாங்கினால் போதுமா? உனக்கு முத்தி கொடுப்பது யார் ? கடைசியில் எமன் வந்து நிற்கப்



Copyright © AMNA Trust, Chennai June 2026

போகிறானே அப்போது வந்து உனக்கு உதவுகிற சினேகிதர் யார் ? என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளதை நாம் நித்தம் நினைவில் கொள்ள வேண்டும்.

*ஜீவ சகோதரர் சங்கர் :*
ஆசானை உணரவும், வாக்மி ஆகவும், வேதம் விளங்கவுமே உபதேசம் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். இறை நிலையைத் தன்னுள் அறிந்தவரும் எமன் எல்லையில் நம்மைக் காப்பவரும் ஆன சினேகிதரே ஆண்குரு. தேவ ரகசியங்கள் யாவற்றையும் மனிதன் தன்னிடம் செயலாக்கும் போதே பசுந்திரை கிழிந்து நித்திய வீடு கைவசமாகும். குரு பிரான் அருளும் அறச் செயலின் மூலமே நம் மனம் செம்மையாகி, சிவ அனுபவம் பெற்று ஜீவனாக மாறுகிறது. வயது வாழ்நாளை வீணாக்கும் குற்றத்திலிருந்து நம்மை மீட்கும் தேசிகரின் திருநடனமே நமது முப்பாழை முப்பாலாக மாற்றி முத்தி அளிக்கிறது.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :* **வேதாகமப் பகிர்தல் - பேதுரு அதிகாரம் - 2 : 20, 21, 22**
மாமிசத்தில் பிறந்தவன் தோற்றமும் அழிவும் உள்ளவன். தேவ ஆவியில் பிறந்தவன் தோற்றமும் அழிவும் அற்றவன். தேவ நாமமாக நம் தலையில் சூட்டப் பெற்ற நாமத்திற்குரிய பொருளை அறியாத வரை நாம் நரனே. குரு அருளால் அதனை அறிந்த பின்னரே மனுவாகவும், தேவனாகவும் மாறுகிறோம். குருபிரானிடம் சரணாகதி அடைவதன் மூலமே ஞான பாதையில் இடையூறாக நிற்கும் ஆணவம் என்ற இடும்பு அகல்கிறது. யுகந்தோறும் வருவேன் என்ற கிருஷ்ண பரமாத்மாவின் சத்திய வேத வாக்கானது ஓங்கி உரத்த குரலில் ஒலித்துக் கொண்டிருக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை எனும் குரு க்ஷேத்திரமாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 31-05-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **உய்யவே யெனக் கும்முல குய்யவே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவ சகோதரர் முனியாண்டி:*
நீதியின் முன்னிலையில் பாரபட்சமின்றி நடைபெறும் மெய்ச் செயலே மகஜர் மைதானத் தீர்ப்பாகும். அறிவின் வழி வாழ்வது சொர்க்கம், மனமெனும் மாயையில் சிக்குவது நரகம் என்பது தேகம் உள்ள போதே அனுபவிப்பதாகும். குருபிரான் நம் ஜீவனைப் பார்த்து அருளும் அன்பே நம்மைச் சிவமாக்கும்.

*ஜீவ சகோதரர் பாண்டி:*
பெரியோர்கள் நம்மை ஏற்றி வைத்த மெய் வணக்க நிலையில் நின்று வைராக்கியமுடன் பழகுவதே மெய் அனுபவம் பெறுவதற்கான வழியாகும். ஆசானின் நன் நாதமே நமது அருந்துணையாகி, பொய்யின்ப உணர்ச்சியில் இருந்து நம்மை மீட்டு, மெய் உணர்வு மேலோங்கி வாழ்வதற்கான உளவுகளை அருள்கிறது.

*ஜீவ சகோதரர் கருப்பசாமி:*
இன்பம், துன்பம் இரண்டையும் அனுபவிக்க உடன்படுவதே உடம்பாகும். ஐம்பூதம் சேர்ந்த சேரி எனும் எல்லையே மனமிருக்கும் இடமாக ஆறாவது அறிவாக இருக்கிறது. மனம் அடங்கும் செயலே அடக்கம் என்பது ஆதி மார்க்க னீதி அவையில் அனுபவமாக்கப் பெறுகிறது. குரு பிரான் தயவால் அறச்செயல் பழகி ஜீவன் இருக்கும் ஸ்தானத்தை அடைவதே வீடடைதலாகும்.


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரி லலிதா:*

உடல் கண்டு உயிர்வழி பற்றி ஓடி ஆத்ம வீடடைந்தவர்க்கே அண்டம் பிண்டத்தின் அகமியச் செயலானது விளங்கும். அண்டம் என்பது காரண தேகம் நின்றிலங்கும் எல்லையாகவும், பிண்டம் என்பது இயற்கை உண்மைக் கடவுளாகவும் நம்மிடம் இருப்பதை, வள்ளல் பிரான் தனது அருட்பாவில் கடவுட் பிரகாசம் அண்டத்தில் நான்கு இடத்திலும், பிண்டத்தில் நான்கு இடத்திலும் உள்ளது என அருளியுள்ளார். ஆசான் தயவால் கடவுள் நிலை அறிந்து அம்மயமாகும் அத்வைத திருச்செயலைத் தன்னுள் உணர்ந்தால், அண்ட பிண்ட நிறை கிருபாகரனாகிய இறைவனைத் தரிசித்து மரணமிலாப் பெருவாழ்வு பெறலாம்.

*ஜீவ சகோதரர் தாமோதரன்:*

நாம் வாழும் இப் பூமிப் பரப்பில் மட்டுமே ஈர்ப்பு விசை உள்ளது. எண்ணாயிரம் கற்பகாலம் யோகம் இருந்தாலும் சலிக்காத இன்ப நாட்டில் நம்மைச் சேர்ப்பது ஆசானின் விஸ்வநாதம் எனும் ஈர்ப்பு விசையே. தூங்கும் சமயம் மட்டுமே மனிதன் மனிதனாக இருக்கிறான் என குருகீதை அருளும் அகமியச் செயலானது, ஞான வாழ்வில் தூங்காமல் தூங்கி சுகம் பெறும் இரகசியமாகும். முக்குணம் கடந்த நிர்க்குண நிஜச் செயலை அருளும் அருந்தலமே ஆதி மார்க்க னீதி அவையாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## இசை வகுப்பு
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 03-05-2026 ~ ஞாயிற்றுக்கிழமை

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆறிரு சமயத்திற்கும் அறிவுரைத் தெய்வமாகி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. குருபிரான் அருளிய படி, மெய்ம்மண ஞானம் திருப்பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

### 17-05-2026 ~ ஞாயிற்றுக்கிழமை

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **வாவிண்மேகக் குடைச்சைவ மேனியர்...** எனும் குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. குருபிரான் அருளிய படி, மெய்ம்மண ஞானம் திருப்பாடல் பதம் பிரித்து, பொருள் உணர்ந்து பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

### 24-05-2026 ~ ஞாயிற்றுக்கிழமை

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **பள்ளி யையுமெய்ப் பால் தந்த வள்ளலை...** எனும் குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. குருபிரான் அருளிய படி, **மெய்ஞ்ஞான பகுப்புப் பா** திருப்பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

### 31-05-2026 ~ ஞாயிற்றுக்கிழமை

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **புலன்வழி பற்றி யோடி போக்கியென்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. குருபிரான் அருளிய படி **மெய்ஞ்ஞான பகுப்புப் பா** திருப்பாடல் பதம் பிரித்து, பொருள் உணர்ந்து பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!



Copyright © AMNA Trust, Chennai 

## 2026 – மே மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 01-05-2026 ~ வெள்ளிக்கிழமை

சற்குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்பாக சரவண நந்தவன வளாகத்தில் அமைந்துள்ள ஆதி மார்க்க னீதி அவையின் பரிசுத்த மெய் ஆலயத்தில் சித்ரா பௌர்ணமி கொடியேற்றும் விழா சிறப்புடன் நடைபெற்றது.

### 16-05-2026 ~ சனிக்கிழமை

சற்குருபிரான் சாலை ரவி அப்பா அவர்கள் சிவகாசிக்கு எழுந்தருளி அருளமுத வர்ஷிப்பு வழங்கினார்கள்.




### 16-05-2026 ~ திங்கள்கிழமை

சற்குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் ஆசீர்பாதத்துடன் ஜீவதம்பதியர் **சிவக்குமார் - சரோஜா** இவர்களின் மகன் **வினோத்குமார் - ரம்யா** திருமணம் ஆம்பூரில் நடைபெற்றது.






Copyright © AMNA Trust, Chennai 

**29-05-2026 ~ வெள்ளிக்கிழமை**

சற்குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்பாக ஜீவதம்பதியர் **வஜ்ஜிரவேல் - லட்சுமி** இவர்களின் புதல்வி **திருநிறைச்செல்வி கோமதி** மற்றும் ஜீவதம்பதியர் **இராமமூர்த்தி - தமிழ்ச்செல்வி** இவர்களின் புதல்வன் **திருநிறைச்செல்வன் தேவானந்த்** இவர்களது னீதித் திருமணம், திண்டிவனம் சரவண நந்தவன வளாகத்தில் அமைந்துள்ள ஆதி மார்க்க னீதி அவையின் பரிசுத்த மெய் ஆலயத்தில் நடைபெற்றது.



**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2026 மே மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 78**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கு ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 59 – Month: June 2026*